செ.வெ.எண். 04. நாள்: 03.05.2020.

**பத்திரிக்கை செய்தி.**

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொழில் நிறுவனங்கள் 06.05.2020 முதல் விதிமுறைகளுக்கு உட்பட்டு இயக்கலாம்**
**மாவட்ட ஆட்சியர் டாக்டர்.சு.பிரபாகர். இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

தமிழகத்தில் கொரனா நோய் தொற்று பரவலை தடுக்கும்பொருட்டு தமிழ்நாடு முழுவதும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் முழுஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டு மேற்கண்ட ஊரடங்கு உத்திரவு 04.05.2020 முதல் 17.05.2020 நள்ளிரவு 12.00 மணி வரை சில நிபந்தனைகளுடன் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி தொழில்நிறுவனங்கள் இயங்கிட அரசு ஆணை எண்.217, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள்: 03.05.2020ன் படி விதிமுறைகள் வகுக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட விதிமுறைகளின்படி பெரு நிறுவனங்கள் தங்களது தொழிற்சாலைகளை இயக்கிட கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியருக்கு mhskgi@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் பெருநிறுவனங்கள் தங்களது தொழிலாளர்களுக்கான வாகன அனுமதிச்சீட்டு பெற **https:\\tnepass.tnega.org** என்ற இணையதள முகவரியில் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

அனைத்து தொழில்நிறுவனங்களும் மேற்கண்ட அரசு ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளை கடைபிடிக்குமாறும், பணி வளாகத்தில் சமூக விலகலை கடைபிடித்து பணியினை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**ஒம்/- சு.பிரபாகர்,**
**மாவட்ட ஆட்சியர்,**
**கிருஷ்ணகிரி.**

//உண்மை நகல்//

மாவட்ட ஆட்சியருக்காக,
கிருஷ்ணகிரி.